# கலைஞரும் நானும் 27

**“நூறாண்டுக்கு ஒருமுறைதான் ஒரு புரட்சியாளன் பிறக்கிறான். ஒரு தலைவன் உருவாகிறான். ஒரு சிந்தனையாளனைக் காண முடிகிறது. அந்த வகையில், நூறாண்டுக்கு ஒருமுறை உருவாகும் மாபெரும் சகாப்தம் கலைஞர்" என கலைஞரின் நினைவுகளைப் போற்றுகிறார் திரைப்பட இயக்குநர் வி.சி.குகநாதன்.**

■ **வி.சி.குகநாதன், திரைப்பட இயக்குநர்**

## “கலைஞர் நகரா... கலைஞரே நகரு என்கிறீர்களா?”



*“1962-ஆம் ஆண்டு முதன்முதலில் கலைஞரைச் சந்திக்கிறேன். அப்போது நான் காஞ்சிபுரத்தில் பள்ளி மாணவன். பேரறிஞர் அண்ணாவின் தேர்தல் பிரச்சாரத்துக்காக, கொடி பிடித்துக்கொண்டு கழகத்தினருடன் செல்லும்போது, எங்கள் பிரச்சாரத்தில் கலந்துகொள்ள கலைஞர் வருகிறார் என்றதும், அந்த இடம் பரபரப்படைந்தது. அப்போதுதான், அவரை முதன்முறையாகப் பார்த்தேன்.*

*‘மலைக்கள்ளன்’ படத்தில் இருந்து, மறைமுகமாக, மானசீக குருவாக இருந்தவரைக் கண்டு பிரமித்தேன். எம்.ஜி.ஆரின் தீவிர பக்தனாகவும், கலைஞரின் எழுத்துக்குத் தீவிர ரசிகராகவும் இருந்த நான், அன்றிரவு பெரிய காஞ்சிபுரத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் முதன்முதலாக, அவரது உரையை நேரில் கேட்டதும் உணர்ச்சி வசப்பட்டவனாக இருந்தேன்.*

### மதிப்பெண் தந்த எழுத்து!

*ஈழத்தில் இருந்து சினிமா நம்பிக்கையுடன்தான் தமிழ்நாடு வந்தேன். காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணா வீட்டுக்கு அருகில் உள்ள பள்ளியில் என்னைச் சேர்த்திருந்தனர். எனது புகுமுக வகுப்பின், இறுதித் தேர்வில், ‘தமிழர் வீரம் குறித்து கட்டுரை எழுதுக’ என கேள்வி இருந்தது. தமிழ் நிலத்தின் வரலாற்றை அறிந்திராத எனக்கு, கலைஞரின் வசனம் அப்போது நினைவுக்கு வந்தது. **‘ராஜா ராணி’** திரைப்படத்தில் “காவிரி தந்த தமிழகத்துப் புதுமணலில் களம் அமைத்து” வசனத்தை எழுதி மதிப்பெண் வாங்கினேன்.*

*அதன் பின்னர் சென்னை, பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்தேன். அங்கு என்னுடன் துரைமுருகன், தமிழ்க்குடிமகன் என பலரும் படித்தனர். அவர்கள் பின்னர் கழகத்தில் இணைந்து பணியாற்றினர். நான் எம்.ஜி.ஆருடன் வேலை செய்யவேண்டும் என்றே இருந்தேன். அதுபோலவே, படித்துக் கொண்டிருக்கும் போதே அவரின் தொடர்பு கிடைத்து, சினிமாவுக்குக் கதை எழுதத் தொடங்கினேன்.*

### கடைசி காலம் வரை அன்பு

*நான் கதை எழுதிய முதல் படமான ‘புதிய பூமி’யின் வசனகர்த்தா எஸ்.எஸ்.தென்னரசு, அந்தப் படத்தின் தயாரிப்பாளர் தென்காசி ஆறுமுகம், சங்கரன் ஆகியோர் கலைஞரின் அன்பைப் பெற்றவர்கள். அவர்களோடு அடிக்கடி கோபாலபுரம் செல்லும் வாய்ப்பு அமைந்ததால், கலைஞருடன் நேரடித் தொடர்பு கிடைத்தது. அப்போது தி.மு.க பொதுக்கூட்டங்கள், மாநாடுகள் என அனைத்திலும் கலந்து கொள்வேன்.*

*நான் எம்.ஜி.ஆர் அவர்களின் வழிகாட்டுதலில் திரைத்துறையில் இயங்கினாலும், அவர் கலைஞரை விட்டுப் பிரிந்த பின்னரும் கலைஞரைச் சந்திப்பதை நான் நிறுத்தியதில்லை. திரைத்துறையில் நான் கதை எழுதிய பல படங்களின் வெற்றி விழா நிகழ்ச்சிகளுக்கு கலைஞர் வருகை தந்து வாழ்த்தி இருக்கிறார். ‘தம்பி குகநாதன்’ என மேடையிலும், தனிப்பட்ட சந்திப்புகளில் ‘குகா’ என்றும் என்னை அன்போடு அழைப்பார். கலைஞரை நான் சந்திக்கும் ஒவ்வொருமுறையும் அவரது கைகளை எடுத்து கண்களில் ஒற்றிக் கொள்வேன். என் மீது அவர் காட்டிய அன்பு கடைசிக்காலம் வரை குறைந்ததில்லை.*

**சினிமா தொழிலாளர்களுக்கு அரசு நிலம் ஒதுக்க வேண்டும் என கோரிக்கை வைத்தேன். அவரும் இசைந்து, பையனூர் அருகே 50 ஏக்கர் நிலம் ஒதுக்கிக் கொடுத்தார்.**

### ஈழத் தமிழர் ஆதரவு!

*தமிழ்நாட்டில் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான போராட்டங்களில் நான் தீவிரமாக ஈடுபட்டேன். கவிஞர் மு.மேத்தா, பேராசிரியர் சுபவீ ஆகியோருடன் இணைந்து **‘தமிழர் ஐக்கிய முன்னணி’** என்கிற இயக்கத்தை ஏற்படுத்தி, பல போராட்டங்களை நடத்தினோம். அதையொட்டி, முதன்முறையாக சென்னையில் மனிதச்சங்கிலிப் போராட்டத்தை நடத்தத் திட்டமிட்டோம். அதற்காக, ஆதரவு கேட்க நீண்ட இடைவெளிக்குப் பின்னர் கலைஞரைச் சந்திக்கச் சென்றேன். அப்போது, “குறிஞ்சி மலர்ந்ததுபோல வந்த குகநாதன்'' என்றார். அவரைச் சந்தித்து 12 ஆண்டுகளாகிவிட்டன என்பதும் அதன் பொருள். கலைஞரின் நினைவாற்றல் அப்படி ஆச்சரியமானது.*

*எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டவர், சில ஆலோசனைகள் கூறியதுடன், நாளை காலை செய்தித் தாள்களைப் பார்க்கவும் எனக்கூறி அனுப்பி வைத்தார். அடுத்த நாள் காலை செய்தித்தாள்களில், **‘மனிதச் சங்கிலி போராட்டத்துக்கு தி.மு.க. ஆதரவு’** என செய்தி வெளியானது. பிறகு அந்தப் போராட்டத்தின் வீச்சு பற்றிக் கேட்கவும் வேண்டுமா?*

*அதுபோல, ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக சென்னை முதல் கன்னியாகுமரி வரை திரைக்கலைஞர்கள் பங்கேற்கும் போராட்டத்தையும் தொடங்கி வைத்தார். அந்த நிகழ்வு முடிந்த அடுத்த நாள் நான் எழுதி இயக்கி, நூறு நாட்கள் ஓடிய **‘மைக்கேல் ராஜ்’** படத்தின் வெற்றிவிழா நடைபெற்றது. அதற்கு வருகை தந்த கலைஞர், ஈழத்தமிழர்களுக்கான போராட்டத்தில் கலந்துகொண்ட திரைக் கலைஞர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாகப் பேசினார். அந்த மேடையில் எனது பட வசனங்களைப் பேசி, என்னைப் பாராட்டினார். அந்த விழாவுக்கு வந்திருந்த என் அம்மாவுக்கு அந்தப் பாராட்டுக்கள் ஆனந்தக் கண்ணீரை வரவைத்தன.*

### பெ:ப்சிக்கு நிலம்

*திரைத்துறையினருக்கு அவர்போல ஆதரவாக இருந்தவர்கள் யாருமில்லை. அவர் முதலமைச்சராக இருந்தபோது, பெஃப்சி தலைவராக நான் தேர்வானேன். அந்த வெற்றியுடன் கோபாலபுரம் சென்றபோது, **“அசாத்திய வெற்றி குகா”** என வாழ்த்தினார். அப்போது சினிமா தொழிலாளர்களுக்கு அரசு நிலம் ஒதுக்க வேண்டும் என கோரிக்கை வைத்தேன். அவரும் இசைந்து, பல கட்ட முயற்சிகளுக்குப் பின்னர், பையனூர் அருகே நிலம் தேர்வு செய்யப்பட்டு, 50 ஏக்கர் நிலம் ஒதுக்கிக் கொடுத்தார். இடம் கொடுத்தது மட்டுமல்ல, அங்கு வீடு கட்ட வங்கிக் கடன் உதவிகளுக்கும் கலைஞர் கொடுத்த ஆதரவை என் வாழ்நாட்களில் மறக்க மாட்டேன்.*

*அங்கு திரைப்பட நகரம் உருவாக்க வேண்டும் என்கிற இன்னொரு கோரிக்கையையும் வைத்தேன். அதையும் ஏற்றுக் கொண்டவர், மேலும் 15 ஏக்கர் நிலம் ஒதுக்கிக் கொடுத்தார். அங்கு கலைஞர் பெயரிலேயே திரைப்பட நகரம் உருவாக்கினோம். அதற்கு நன்றி தெரிவிக்கும் விழாவில், அனைத்து மாநில சினிமா தொழிற்சங்க நிர்வாகிகளையும் அழைத்து வந்து வாழ்த்த வைத்தேன். “கலைஞர் நகர் என்கிறீர்களா, கலைஞரே நகரு என்கிறீர்களா?” என அந்த மேடையில் கலைஞரின் வார்த்தை விளையாட்டு, நேரு விளையாட்டு அரங்கையே சிரிப்பலையால் அதிர வைத்தது.*

*இப்போது ‘கலைஞர் திரைப்பட நகரில்’ படப்பிடிப்புகள் நடைபெற்று வருகின்றன. திரைக் கலைஞர்களுக்கு வாழ்விடம் கொடுத்த கலைஞருக்கு அங்கு ஒரு **‘திரைக் கோட்டம்’** அமைக்கும் வேலைகளையும் தொடங்க உள்ளோம்.*

### பாராட்டு விழா மேடை

*திரைப்படத் தொழிலாளர்களுக்கு நல வாரியம் அமைத்தபோது, **‘பாசத்தலைவனுக்குப் பாராட்டு விழா’** எடுத்தேன். அந்தக் கூட்டத்தில் சிறு சலசலப்பு எழுந்தது. அது தொடர்பாக, நான் கடும் கோபமடைந்து, “திரைப்படச் சங்கங்களின் கட்டுப்பாடுகளை மீறி யார் பேசினாலும் நீக்கப்படுவார்கள்” என மறுநாள் காட்டமான அறிக்கை விட்டிருந்தேன். அன்று கலைஞர் அழைத்தும் போகவில்லை.*

*அடுத்த நாள் காலையிலேயே போன் செய்தவர், “இதுபோல நிறைய பார்த்துவிட்டேன் குகா, அதனால் நீ வருத்தப்படாதே. கவனமாக இரு” என எச்சரிக்கை செய்தார். சிறிது நேரத்தில் என் வீட்டுக்கு போலீஸ் காவல் போடப்பட்டிருந்தது. இப்படி கலைஞரின் அன்புக்கும், வாஞ்சைக்கும் உரியவனாக இருந்திருக்கிறேன். அவரது கரங்களின் ஈரம் என் நெஞ்சில் என்றும் அலையடிக்கும்”.*

**...பகிர்வார்கள்**

## மிதக்கும் தலைநகர் – பறக்கும் பிரதமர்!

கடந்த சில நாட்களாக டெல்லி, உத்தரகாண்ட், அரியானா, பஞ்சாப் மாநிலங்களில் கனமழை பெய்து வருகிறது. இதனால் அந்த மாநிலங்களில் மக்களின் இயல்புநிலை முடங்கியுள்ள நிலையில், இதுவரை இல்லாத வகையில் தலைநகர் டெல்லி, வெள்ளத்தில் மிதக்கிறது. குறிப்பாக, யமுனை ஆற்றின் வெள்ளநீர், குடியிருப்புப் பகுதிகளில் சூழ்ந்துள்ளது. செங்கோட்டையைச் சூழ்ந்து ஓடும் வெள்ளநீரை, அபாயத்தின் அடையாளமாகப் பார்க்கலாம். பள்ளி, கல்லூரிகள், போக்குவரத்துச் சேவைகள் என அனைத்தும் முடங்கியுள்ளன. பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளில் அம்மாநில அரசு ஈடுபட்டுள்ளது. ஆனால், ஒன்றிய அரசோ பாராமுகமாக உள்ளது.

மழை வெள்ளத்தில் மக்கள் தத்தளிக்கும் நிலையில், மக்களிடம் ஆறுதல் சொல்லக்கூட பிரதமர் முன்வரவில்லை. மக்கள் தத்தளிக்கும்போது அவர் ஃபிரான்ஸ் செல்கிறார். மணிப்பூர் பற்றி எரிந்துகொண்டிருக்கும்போது அமெரிக்கா, எகிப்து எனப் பயணப்பட்டார். “சொந்த நாட்டில் மக்களின் குரலுக்குச் செவி சாய்க்காமல், வெளிநாடுகளில் பெருமை பேசுவது அவரது வழக்கமாக உள்ளது” என விமர்சனம் எழுந்துள்ளது. ஒன்றிய அரசின் மீது வைக்கப்படும் எந்த விமர்சனத்துக்கும் இதுவரை பதில் இருந்ததில்லை. யமுனை வடிந்தாலும், கொந்தளிக்கும் மக்களின் கோபம் வடியப்போவதில்லை.

## ஃப்ளாஷ்பேக்





இன்பராஜ்

### கழகமே குடும்பம்!

என் தந்தை பம்மல் நல்லதம்பி, தாம்பரம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினராக 1980-84 ஆண்டுகளில் இருந்தார். 1983-ஆம் ஆண்டு ஜனவரி 21-ஆம் தேதி, என் அக்காவின் திருமண விழா ஏவி.எம். ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஆற்காட்டார், நாஞ்சிலார், ஜி.லட்சுமணன் ஆகியோர் வருகை தந்து வாழ்த்துரை வழங்கினர். கழகத்தின் முன்னோடித் தலைவர்கள் பேசுவதை, அப்போது சிறுவனாக இருந்த நான் கேட்டுக் கொண்டிருந்தேன். அப்போது எடுக்கப்பட்ட புகைப்படம் இது.

**–பம்மல் இன்பராஜ், நகர முன்னாள் துணைச் செயலாளர், பம்மல், செங்கல்பட்டு மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப் படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### காப்பாற்றிய அண்ணா!

**1970-ஆம் ஆண்டு திருச்சி மாநாட்டையொட்டி, பேரணி தொடங்குவதற்கு முன்னர் பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவிக்க, சிலையின் பீடத்தில் ஏறினார் கலைஞர். அப்போது சிலைக்குச் செய்யப்பட்ட மின் விளக்கு அலங்காரத்திலிருந்து மின் கசிவு ஏற்பட்டது. பூ மாலையிலிருந்த ஈரத்தின் காரணமாக ஷாக் அடித்ததும் சுதாரித்த கலைஞர், பீடத்திலிருந்து கீழே சரிந்தார். கால் விநாடிக்கும் குறைவான அந்த நேரத்தில் சமாளித்து, உயிர் தப்பினார். “அது மட்டும் அன்றைக்கு நடந்திருந்தால் என் வாழ்க்கையில் எத்தனை நண்பர்கள் எனக்குத் துரோகியானார்கள், என்ற கசப்பு மிகுந்த கணக்கே என் கவனத்துக்கு வந்திருக்காது” என எழுதினார் கலைஞர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 180




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131